1970 மார்ச் 12]

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இந்தப் பதவிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்ததால் அல்லது எடுத்துவிட்டதாலே அரசாங்கத்திற்கு எந்தவிதத்திலும் பொருளாதார ரீதியில் லாபம் ஏற்படவில்லை என்பதோடு, அடிக்கடி தற்காலிகமாக நீக்கி, மறுபடியும் உயர்த்துவது என்று இப்படி அடிக்கடி தற்காலிகமாக நீக்கிவிடுவதால் வேலைப்பளுச் சிக்கலாகியிருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா? பஞ்சாயத்துத் தேர்தல் நிரந்தரமாக ஆகிவிட்டதால் இந்தப் பதவிகளை நிரந்தரமாக ஆக்கி இந்தச் சிக்கலைத் தவிர்க்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பதவி உயர்விலேயிருந்து பதவியிறக்கப்பட்ட நேரத்தில், பதவி உயர்வுமூலம் கொடுக்கும் தொகை அரசாங்கத்திற்கு மிச்சம்தான். இதிலே என்ன மிச்சம் ஏற்பட்டு இருக்கிறது என்ற அந்த வகையில் இது மிச்சம்தான். இரண்டாவது, பதவியிறக்கம், அடிக்கடி செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. இந்தத் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பதவி உயர்விற்கான வாய்ப்புகள் மேலும்மேலும் அதிகமாக்கப்பட்டு, அவர்கள் மன நிறைவோடு இருக்கிறார்கள். கடைசியாக அவர்கள் குறிப்பிட்டதற்கு மாண்புமிகு திரு. விநாயகம் அவர்களின் கேள்விக்குப் பதில் கூறிவிட்டேன்.

George Town Co-operative Bank.

* 346 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the management of the George Town Co-operative Bank has been declaring Bonus on Recurring deposit accumulations in violation of Rule 46(4) of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963 ;

(*b*) if so, the loss sustained by the Society under this Head from the year 1961–62 to 1968–69 ; and

(*c*) the action Government propose to take against those responsible for the mismanagement?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that a bonus of nearly Rs. 1 lakh was declared in 1960–61, Rs. 1½ lakhs in 1965–66 and Rs. 2.54 lakhs in 1967–68. Also is it not a fact that the bonus even exceeds the percentage that is allowed even for non-credit societies —normally credit societies should not at all declare bonus and only non-credit societies are given the option to declare 25 per cent. bonus. Also, is it not a fact that there is a total violation of rule 46(4) which states that the credit society should not declare any bonus at all?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, as the hon. Member has quoted rule 46(4), I may as well tell him that rule 46 (4) refers to societies other than banks and this happens to be a bank.

DR. H. V. HANDE : Is it not a fact that this also comes under the Banking Companies Act 1964? Is it not applicable to co-operative societies? There is a clear ruling. Have you consulted the Reserve Bank on this? How do you say that it does not come under the Banking Companies Amendment Act?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member need not get excited over this. The question was about Rule 46(4) framed under the Madras Co-operative Societies Act, and the rules under the Banking Companies Amendment Act. If the hon. Member is asking a supplementary question relating to the Banking Companies Amendment Act, he may do so. But let him not confuse one with the other.

Sri Sadana Rescue Centre

*347 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowment be pleased to state :

(*a*) whether new buildings are to be constructed for the Sri Sadana Rescue Centre for Women in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) & (இ) அரசு கண்காணிப்பு இல்லமும் ஸ்ரீ சாதன மீட்பு இல்லமும் இப்பொழுது செயல்பட்டு வரும், சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலையிலுள்ள "எவரெஸ்ட்" என்கிற, அரசுக்குச் சொந்தமான சுற்று வளவுக்குள் கிடைக்கக்கூடிய காலி நிலத்தில் ரூ. 1.40 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஸ்ரீ சாதன மீட்பு இல்லத்திற்காக விடுதிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு மட்டுமே அரசு ஒப்பளித்துள்ளது. பொதுப்பணித் துறையினால் மேற்படி பணிக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கட்டிடப் பணிக்காக ஒப்பந்தப் புள்ளிகளும் அனுப்புமாறு கேட்கப் பட்டுள்ளது. பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று செங்கற்பட்டு சரகம், சென்னை, கண்காணிப்புப் பொறியாளருக்குப் பொதுப்பணித்துறையின் (கட்டிடங்கள்) தலைமைப் பொறியாளர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ஸ்ரீ சாதன மீட்பு இல்லத்தில் எத்தனை மாணவிகள் இப்பொழுது இருக்கிறார்கள். புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது மானியத் தொகை கொடுக்க இருக்கிறதா? ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இந்த ஸ்ரீ சாதன மீட்பு இல்லத்தில் வயதுவந்தவர்கள் 68 பேர்களும், குழந்தைகள் நான்கு பேர்களும் இருக்கிறார்கள். இந்தக் கட்டடத்திற்கான தொகை அரசாங்கத்தின்மூலமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். சரியான தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது கட்டடம் இருக்கிற இடத்தில் இடம் போதவில்லை, ஆகவே இதைப் பெருக்குகிறோம், புதியதாகக் கட்டடம் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். அது எதைக் காட்டுகிறது?